அருண் ஜெட்லி.
நாடாளுமன்ற உறுப்பினர்,
எதிர்கட்சி தலைவர்
(மாநிலங்களவை).

43, நாடாளுமன்ற இல்லம்,
புதுதில்லி- 110001 .
தொலைபேசி; 23016707, 23034883,
பேக்ஸ்; 23793433.

டிசம்பர், 29, 2013.

அன்புள்ள டாக்டர்.மன்மோகன் சிங் அவர்களுக்கு,

திரு. வீர் பத்ர சிங் , இமாச்சல பிரதேசத்தின் நீண்ட காலமாக பதவியில் இருக்கும் முதல்வர்களில் ஒருவர். அவர் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவர். கடந்த 15 மாதங்களில் மீடியாக்களில் அவரை அம்பலப்படுத்தும் வகையில் பல்வேறு செய்திகள் வெளியாகி வருகின்றன. இவை அனைத்துமே தனித்தனியானவை .மேலும் ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றமும் ஆகும். அரசை எதிர்ப்பவர்களுக்கு தொல்லை தரும் வகையில் புலனாய்வு அமைப்புகள் நடத்து கொள்ளும் அதே நேரத்தில், விதி மீறலில் ஈடுபட்டவர்கள் ஐ.மு.கூ வை சேர்ந்தவர்களாக இருந்தால் அவர்களோடு சேர்ந்து சதி செய்வதில் ஈடுபட்டிருக்கின்றன என்று ஐ.மு.கூ அரசு மீது நான் குற்றம் சாட்டுகிறேன். இந்த கடிதத்தில் குறிப்பிடப்படும் விவரங்கள் இதை உறுதி படுத்தும்.

வழக்கு 1; நாட்குறிப்பில் குறிப்புகள்.

தி இஸ்பாட் குருப் என்று பிரபலமாக குறிப்பிடப்படும் எஃகு உற்பத்தி நிறுவனத்தின் அலுவலகங்களில் வருமான வரித்துறை சோதனை நடத்தியது. இந்த சோதனையில் சில நாட்குறிப்புகள் சிக்கின. இந்த நாட்குறிப்பில் 2007 முதல் 2010 வரையாக காலத்தில் முக்கிய பிரமுகர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டது பற்றி குறித்து வைக்கப்பட்டுள்ளது. இவை எஃகு அமைச்சகத்தில் உள்ள ஊழியர்கள் மற்றும் அமைச்சகத்தில் இதர நபர்களுக்கு வழங்கப்பட்டதாகும். சி.பி.ஐ மற்றும் அமாலாக்க பிரிவு ஊழியர்களுக்கு பணம் கொடுக்கப்பட்ட செலவு தொடர்பான குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. மேலும், வி.பி.எஸ் என்பவருக்கு பணம் கொடுக்கப்பட்டது தொடர்பான குறிப்புகளும் உள்ளன. இந்த காலத்தில் எஃகு துறை அமைச்சராக இருந்தவர் வீர் பத்ர சிங். அவரது முதல் எழுத்துக்கள் வி.பி.எஸ் ஆகும். இந்த குறிப்புகள் பற்றி விசாரித்து இதில் குறிப்பிட்டுள்ள வி.பி.எஸ் யார் என்று விசாரனை செய்து கண்டறிவது சி.பி.ஐ மற்றும் வருமான வரித்துறையும் பொறுப்பாகும். மீடியா

செய்திகள் மற்றும் ஆவணங்கள் குறித்து நான் விரிவாக ஒரு கட்டுறையில் கருத்து தெரிவித்துள்ளேன். அந்த கட்டுரை நகலை இதனுடன் இணைத்துள்ளேன்.

வழக்கு 2; சட்ட விரோதமாக பெற்ற பணத்தை பயன்படுத்தல்.

இமாச்சல பிரதேசத்தின் சிம்லாவில் தொடர்ச்சியாக பல சம்பவங்கள் நிகழ்ந்தன. திரு. ஆனந்த் சவ்கான் என்பவர் சிமலாவில் பஞ்சாப் நேஷனல் வங்கியில் எண் 524185 என்னும் வங்கி கணக்கை துவக்கி இதில் ரூ. 5 கோடி ரொக்க பணத்தை டெபாசிட் செய்கிறார். இந்த கணக்கில்,இருந்து அவர் பல காசோலைகளை அளித்து, திரு, வீர் பத்ர சிங் , அவரது மனைவி திருமதி. பிரதிபா சிங் மற்றும் மகன்,மகளுக்கான எல்.ஐ.சி பாலிசிகளை வாங்குவதற்கான பணத்தை அளித்திருக்கிறார். திரு. வீர் பத்ர சிங் மற்றும் அவரது குடும்பத்தினரின் நலனுக்காகவே ஆன்ந்த் சவ்கான் இந்த வங்கி கணக்கை துவக்கியிருக்கிறார். வருமான வரித்துறையால் இது விசாரிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 2009, மார்ச் 2010, மார்ச் 2011 ஆகியவற்றில் முடியும் மூன்று ஆண்டுகளில் திரு. வீர் பத்ர சிங், தனது ஆப்பில் தோட்டத்தில் இருந்து முறையே ரூ.7 லட்சம் ( தோராயமாக ) , ரூ. 15 லட்சம் , ரூ. 25 லட்சம் வருமானம் வந்ததாக தெரிவித்துள்ளார். 17.06.2008 அன்று செய்த ஒப்பந்தத்தின் படி இதன் நிர்வாகத்தை பிஷம்பர் தாஸ் என்பவரிடம் ஒப்படைத்துள்ளார். அவர் திரு. வீர் பத்ர சிங்கிற்கு மூன்று ஆண்டுகளுக்கும் தலா, ரூ. 10 லட்சத்து 50 ஆயிரம் செலுத்தியுள்ளார்.

திரு. ஆனந்த சிங் ரொக்கத்தை டெபாசிட் செய்தது பற்றியும் இதை திரு வீர் பத்ர சிங் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கான எல்.ஐ.சி பால்சி எடுக்க பணமாக மாற்றியது, புலனாய்வு அமைப்புகளுக்கு தெரிய வந்ததை அடுத்து , திரு. சிங் 2 மார்ச், 2012 ல் திருத்தப்பட்ட வருமான வரி கணக்கை தாக்கல் செய்தார். அதில் வரது விவசாய வருமான்ம் ரூ.6.15 கோடியாக அதிகரித்திருந்தது. பிஷம்பர் தாசுடனான ஒப்பந்தம் மறைந்து விட்டது என்றும் அதற்கு பதிலாக ஆனந்த் சவ்கானே ஒப்பந்ததாரர் என்றும் கூறியிருந்தார்.

இது தொடர்பாக 23-10-12 நான் ஒரு கட்டுரை எழுதியுள்ளேன். அதன் நகலை இதனுடன் இணைத்துள்ளேன்.

வழக்கு 3; அரசு சலுகை காட்டிய ஒருவரிடம் இருந்து தனக்கும் குடும்பத்துக்கும் ஆதாயம் பெற்றது.

இமாச்சல பிரதேச அரசு சாய் கோத்தி நீர் மின்நிலைய திட்டத்தை வென்சர் எனர்ஜி அண்ட் டெக்னாலஜி பிரவெட் லிட் நிறுவனத்திற்கு 14-06-2002 அன்று வழங்கியது. இந்நிறுவனம் திட்டத்தை குறித்த காலத்தில் நிறைவேற்றவில்லை. அது கோரிய

நீட்டிப்பு வழங்கப்பட்டது. இதனிடையே 20-09-2004 அன்று இந்த ஒப்பந்தத்தை இமாச்சல பிரதேச அரசு ரத்து செய்ய தீர்மானித்து எச்.பி.இ.பி மூலம் நிறைவேற்ற முடிவு செய்தது. இருப்பினும் இந்த முடிவு மறு பரிசீலனை செய்யப்பட்டு மேற்சொன்ன நிறுவனம் நீட்டிப்பு காலத்தில் இதை முடிக்க அனுமதிக்கப்பட்டது. 4-09-2013 அன்று வீர் பத்ர சிங் மீண்டும் இமாச்சல பிரதேச முதல்வராக ஆன போது இந்த நிறுவனத்துக்கு அமைச்சரவை பத்து மாத கால நீட்டிப்பு அளித்ததோடு ஒரு சில பணம் வழங்கள் நிபந்தனை விதித்தது.

நிறுவனத்துக்கு ஆதரவாக சலுகை காட்டப்பட்டுள்ளது. ஆனால் இது மட்டும் அல்ல. இதே காலத்தில் திரு. வீர் பத்ர சிங் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு நிறுவனம் பதில் சலுகைகளை வழங்கியுள்ளது. கிழகண்ட ஆவண்ங்களில் இருந்து இது தெளிவாகிறது.

* இமாச்சல பிரதேச சட்டமன்ற தேர்தல் அதிகாரி முன் 17-10-2012 அன்று திரு வீர் பத்ர சிங் தனது சொத்து மற்றும் கடன் பொறுப்பு விவரங்களை சமர்பித்தார். இதில் இந்நிறுவனம் பணம் கொடுத்தது பற்றி எந்த குறிப்பும் இல்லை.

* திரு. வீர் பத்ர சிங் ராஜினாமாவை அடுத்து மண்டி மக்களவை தொகுதி இடைத்தேர்தலில் திருமதி. பிரதிபா சிங் போட்டியிட்டார். அவர் 30-15-2013 அன்று தனது மனுவை தாக்கல் செய்தார்.அதில் , இந்த நிறுவனத்தின் அதிபர் திரு.வக்கமுல்லா சந்திரசேகர் திருமதி பிரதிபா சிங்கிற்கு ஈடு செய்யாத கடனாக ரூ. 1.5 கோடி மற்றும் திரு வீர் பத்ர சிங்கிற்கு ரூ.2.40 கோடி கடன் தந்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முதல்வர் சலுகை காட்டிய ஒரு நிறுவனத்திடம் இருந்து முதலவர் மற்றும் அவரது மனைவி கடன் பெறலாமா?

* திரு. வீர் பத்ர சிங் மற்றும் அவரது குடும்பத்துக்கு உபரி பணம் வங்கிகளில் இருப்பதை ஆவணங்கள் காட்டுகின்றன. அவர்களுக்கு கடன் தேவையில்லை.

* நிறுவனம் 10 மாத நீட்டிப்பு காலத்துக்கு ரூ. 58. 19 லட்சம் செலுத்த வேண்டும்.ஆனால் இன்னும் செலுத்தவில்லை.

* நிறுவன அதிபர் வக்கமுல்லா சந்திரசேகர் மற்றும் நிறுவனம் இருவருமே கடனில் சிக்கித்தவிக்கின்றனர். அவரே மிகவும் பண நெருக்கடியில் இருக்கும் போது அவர் ஏன் கடன் வழங்க வேண்டும் என்று தெரியவில்லை.

* திரு. வக்கமுல்லா சந்திரசேகரால் துவக்கப்பட்ட மற்றொரு நிறுவனமான தாரிணி இன்பிராஸ்டக்சர்ஸ் லிட், கம்பெனிகள் பதிவாளர் அலுவலகத்தில் சமர்பித்த தகவல் படி 29-09-2012 அன்று உள்ள நிறுவன பங்குதாரர்கள் பட்டியலில் , திருமதி. பிரதிபா சிங் , 3,40,000 சமபங்குகளுடனும் அவரது மகன் விக்ரமாதிய சிங் 3,40,000

சமபங்குகளுடனும் மகள் செல்வி அபாராஜிதா குமாரி 3,40,000 சமபங்குகளுடனும் இடம்பெற்றுள்ளனர். மேலும் இந்நிறுவனத்தில் முதலவரின் ஓ.எஸ்.டியான திரு. அமீத் பால் சிங்கும் 10,000 சமபங்குகள் பெற்றுள்ளார்.

* முதலவர் மற்றும் அவரது மனைவிக்கு கடன் வழங்கும் நிறுவனத்திற்கு சலுகை காட்டப்பட்டுள்ளதை புதிய ஆவண்க்கள் உனர்த்துகின்றன. மேலும் இதன் குழும் நிறுவனத்தில் முதல்வரும் அவர் குடும்பத்தினரும் பங்குதாரர்களாகின்றனர். சலுகைக்கு பதிலாக ஆதாயம் பெறுவதற்கு இதைவிட வேறு ஆதாரம் தேவையா?

* மேலே சொன்ன தகவல்கள் தனித்தனியே மற்றும் கூட்டாக ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றமாகும். மேலும் வருவாய் துறையின் பல விதிக்ளை மீறுவதாகும்.

இந்த வழக்குகள் சி.பி.ஐ மற்றும் வருமான வரித்துறையால் உடனடியாக விசாரிக்கப்பட வேண்டியவையாகும். இது தொடர்பாக நீங்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள

அருண் ஜெட்லி.

பெறுனர்,

டாக்டர்.மன்மோகன் சிங்,
பிரதமர்,
புது தில்லி.

மேலே உள்ளது போல் இணைக்கப்பட்டுள்ளது.